PAFFREL
නිදහස් හා සාධාරණ මැතිවරණයන් සඳහා ජනතා ක්‍රියාකාරීත්වය.
சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தல்களுக்கான மக்கள் செயற்பாடு.
PEOPLE'S ACTION FOR FREE & FAIR ELECTIONS

**தேர்தல் தின அறிக்கை**

**உள்ளூராட்சி அதிகாரசபைத் தேர்தல் - 2025**

**வைகாசி மாதம் 06 ஆம் திகதி**

2025 வைகாசி மாதம் 06 ஆம் திகதி மொத்தமாக 339 உள்ளூராட்சி மன்றங்களுக்கான (மாநகர சபைகள் 28 உம், நகர சபைகள் 36 உம் மற்றும் 275 பிரதேச சபைகள்) 2025 ஆம் ஆண்டு உள்ளூராட்சி அதிகாரசபைகளுக்கான தேர்தல் நடாத்தப்பட்டுள்ளது. குறிப்பாக ஏழு ஆண்டுகளுக்குப் பின்னர் புதிய அரசாங்கத்தின் கீழ் இடம்பெற்ற உள்ளூராட்சி அதிகாரசபைகளுக்கான தேர்தலாக அமைகின்றது. மொத்தமாக 13,759 வாக்கெடுப்பு நிலையங்களில் 17,156,338 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளதுடன், அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்கள் சார்பாக 75,589 வேட்பாளர்கள் போட்டியிட்டுள்ளனர். ஆயினும், வாக்களிப்பு வீதம் அதிகளவில் காணப்படாததுடன், அது 55% - 60% சதவீதமாகக் காணப்பட்டது.

இலங்கை தேர்தல் ஆணைக்குழுவின் (ECSL) வழிகாட்டலின் கீழ் நடாத்தப்பட்ட இத்தேர்தல் அமைதியானதும் முறையானதுமான சூழலில் தேர்தல் வெற்றிகரமாக நடாத்தப்பட்டுள்ளது. ஒருசில வேட்பாளர்கள், பல்வேறு அரசியல் கட்சி ஆதரவாளர்கள் மற்றும் சுயேட்சைக் குழுக்களில் சில விதிவிலக்குகள் காணப்பட்டன. அங்கீகரிக்கப்பட்ட தேர்தல் கண்காணிப்பு நிறுவனங்கள் உள்ளிட்ட பிரதான பங்காளர்களுடன் இணைந்து ஒத்துழைப்புக்களுடன், ஆணைக்குழுவானது தெளிவுடனும், வெளிப்படைத்தன்மையுடனும், அனைவரையும் உள்வாங்கியும் ஜனநாயகக் கோட்பாடுகளுக்கமைய மேற்கொள்ளப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டது. தேர்தலுக்கு முன்னரான காலப்பகுதி தொடக்கம் தேர்தல் தினம் வரைக்கும், தேர்தல் நீதியாகவும் நேர்மையாகவும் நடாத்தப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு தேர்தல் ஆணைக்குழு விரிவான படிமுறைகளை மேற்கொண்டிருந்தது. ஒட்டுமொத்த செயன்முறையிலும், இலங்கை பொலிசார் ஏற்புடைய நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்புக்களை மேற்கொண்டு, சட்டம் ஒழுங்கைப் பேணுவதற்கு முக்கிய பணிகளை மேற்கொண்டிருந்தனர். அவர்கள் தொழில்வாண்மையாகவும், நடுநிலையாகவும் மற்றும் தேர்தல் சட்டங்களைக் கவனமாகவும் கடைப்பிடித்திருந்தனர். தேர்தலில் போட்டியிட்ட அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்கள் மற்றும் ஜனநாயகத்திற்காக பலம்வாய்ந்த ஒத்துழைப்புக்களை வழங்கிய பொதுமக்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அமைதியானதும், முறையானதுமான தேர்தலை நடாத்துவதற்கு இவ் ஒத்துழைப்புக்கள் ஏதுவாக அமைந்தன.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒத்திவைப்பதற்குப் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. உயர் நீதிமன்ற மனுத்தாக்கல் செய்யப்பட்டமை உள்ளிட்ட – போதியளவு நிதியில்லையெனத் தெரிவிக்கப்பட்டது. அதனால், ப∴வ்ரல், தேசிய மக்கள் சக்தி (NPP), மற்றும் மாற்றுக் கொள்கை நிலையம் (CPA) குறித்த கால ஒத்திவைப்புக்கு எதிராக பொதுமக்களின் அடிப்படை உரிமை மீறப்படுகின்றமையைத் தெரிவித்து மனுத்தாக்கல் செய்தன. 2024 ஆம் ஆண்டு ஆவணி மாதம், உயர்

#No.16, Byrde Place, Off Pamankada Rd, Colombo 06.
Tel : (+94) 11 2558570 / 11 2558571 Fax : (+94) 11 2558572
Email : paffrel@sltnet.lk Web : www.paffrel.com

நீதிமன்றம், குறித்த கால ஒத்திவைப்பு பிரஜைகளின் அடிப்படை உரிமை மற்றும் மக்கள் இறைமையை மீறுவதாகத் தீர்ப்பு வழங்கியிருந்தது. தேர்தல் ஆணைக்குழு மற்றும் ஜனாதிபதி அவர்கள் பொறுப்புக்கூற வேண்டுமெனவும், உடனடியாக தேர்தல் நடாத்தப்பட வேண்டுமெனவும் உத்தரவு பிறப்பித்திருந்தது.

பஃவ்ரல் அமைப்பு அதிகளவான வாக்கெடுப்பு நிலையங்களைக் கண்காணிப்பு செய்துள்ளதுடன், 3,000 தேர்தல் கண்காணிப்பாளர்கள் கண்காணிப்பு நடவடிக்கைகளில் முனைப்பாகப் பங்கெடுத்திருந்தனர். தேர்தல் தினத்தன்று பஃவ்ரல் அமைப்புக்கு 119 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளது. (உறுதிப்படுத்தப்பட்ட முறைப்பாடுகள் 80 உம், மற்றும் உறுதிப்படுத்தப்படாத 39 முறைப்பாடுகளும்). இவற்றில் 119 முறைப்பாடுகள் சட்டவிரோத தேர்தல் பரப்புரை நடவடிக்கைகள் பற்றியும், வாக்காளர்களுக்கு அழுத்தங் கொடுக்கும் முயற்சிகள் போன்ற தேர்தல் சட்டங்கள் மீறப்பட்டமை தொடர்பானவையாகும்.

இறத்கம, கோட்டை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, கெஸ்பாவ, அநுராதபுரம், பதுளை, வென்னப்புவ, நாவுல, அம்பாந்தோட்டை, பூண்டுலோயா, கொழும்பு, களுத்துறை, குளியாப்பிட்டி, பியகம், காலி, ஹிக்கடுவ, மடுகந்த, நொச்சியாகம, மாத்தறை, கட்டான, சியம்பலாப்பிட்டி, மத்துகம, பேருவளை, யட்டியாந்தோட்டை மற்றும் அவிஸ்ஸாவல தேர்தல் சட்டங்கள் மீறப்பட்ட சில சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இச்சம்பவங்களில் சட்ட விரோத தேர்தல் பரப்புரை நடவடிக்கைகள், தேர்தல் தினத்தன்று வாக்காளர்களை ஏற்றிச் செல்லல் மற்றும் வாக்காளர்களுக்கு அழுத்தங் கொடுப்பதற்கு முயற்சித்தமை போன்றன காணப்படுகின்றன. நுரைச்சோலை, புத்தளம் மற்றும் தெரணியகல போன்ற பிரதேசங்களில் அடித்துத் தாக்கிய வன்முறைச் சம்பவங்கள் மூன்று பதிவாகியுள்ளன. ஆயினும், தேர்தல் தினத்தன்று வாக்களிப்பதில் அதிக தாக்கம் செலுத்தக்கூடிய சம்பவமேதும் இடம்பெறவில்லை. தேர்தலுக்கு முன்னரான காலப்பகுதி தொடக்கம் தேர்தல் தினத்தன்று வரைக்கும் அரச அதிகாரம், வளங்கள் மற்றும் அரச ஊழியர்களை முறைகேடாகப் பயன்படுத்தப்பட்ட சம்பவங்கள் ஒருசில இடங்களில் பதிவாகியுள்ளதுடன், இவ்வாறான செயற்பாடுகள் பொதுமக்கள் வாக்களிப்பதற்கு ஏற்படுத்திய தாக்கங்கள் பற்றி இன்னுமே தீர்மானிக்க முடியாதென்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

தேர்தல் தினத்தன்று பஃவ்ரல் அமைப்பின் நடமாடும் கண்காணிப்பாளர்கள், நீண்டகால கண்காணிப்பாளர்கள் மற்றும் நிரந்தர நிலையக் கண்காணிப்பாளர்கள் மூலம் அறிக்கைப்படுத்தப்பட்ட விடயங்களுக்கமைய, வாக்கெடுப்பு நிலையங்களில் நீண்ட வரிசைகள் காணப்படவில்லை எனவும், நாடளாவிய ரீதியில் தொடர்ந்து நாள் முழுவதும் வாக்காளர்கள் வருகை தந்தவண்ணம் இருந்ததாகவும், மேலதிக வரிசைகளோ, வாக்கெடுப்பு நிலையங்களைச் சுற்றிக் கூட்டம் கூட்டமாகவோ இருக்கவில்லையெனவும் குறிப்பிட்டுக் கூறமுடிகின்றது. பஃவ்ரல் அமைப்பின் நிலையக் கண்காணிப்பாளர்கள் 25% சதவீதமான வாக்கெடுப்பு நிலையங்களை உள்ளடக்கியிருந்தமையும், நடமாடும் கண்காணிப்பாளர்கள் மேலும் 25% சதவீதமாக வாக்கெடுப்பு நிலையங்களை உள்ளடக்கியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. ஒருசில வாக்கெடுப்பு நிலையங்களைத் தவிர, இயலாமைக்குட்பட்டவர்களுக்குப் போதியளவு வசதிகள் வழங்கப்பட்டிருந்தன. நாட்டின் ஒருசில பிரதேசங்களில் இயலாமைக்குட்பட்ட நபர்களுக்கான அணுகுவசதிகள் தொடர்பான பிரச்சினைகள் நிலவியமையை பஃவ்ரல் அமைப்பு அவதானித்ததுடன், எதிர்காலத்தில் வாக்கெடுப்பு நிலையங்களில் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தேர்தல் ஆணைக்குழுவிடம் கோரிக்கையும் விடுத்துள்ளது. மேலும், வாக்கெடுப்பு நிலையங்களை அண்டிய பிரதேசங்களில் சட்டவிரோத தேர்தல் பரப்புரைகள், மக்கள் ஒன்றுகூடல்கள், பயமுறுத்தல், அழுத்தங் கொடுத்தல் மற்றும் வாக்காளர்களைப்

போக்குவரத்துச் செய்தல் போன்ற மோசமான சம்பவங்கள் எதுவும் பதிவாகவில்லை. ஒட்டுமொத்தத்தில், தேர்தல் தினத்தன்று வாக்களிக்கும் செயன்முறை மற்றும் முகாமைத்துவம் முறையாகவும் எவ்வித முக்கிய பிரச்சினைகளின்றி இடம்பெற்றது. பெறுபேறுகளை அறிவிக்கும் போதும், உள்ளூராட்சி அதிகாரசபைகளை அமைக்கும் போதும் அனைவரும் இவ்வாறே ஆரோக்கியமான நடத்தைகளை தொடர்ச்சியாகப் பேணுவீர்களென பஃவ்ரல் அமைப்பு எதிர்பார்க்கின்றது.

2025 உள்ளூராட்சி அதிகாரசபைத் தேர்தல் செயன்முறையில் நேரடியாக செயலாற்றிய அதிகாரிகளால் சிறந்த நேர்மயமான படிமுறைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. தேர்தல் பிணக்குகளைத் துரிதமாக முறையிடுவதற்காக தேர்தல் பிணக்குகளுக்கான தீர்வுகளுக்காக எளிமையானதும், வினைத்திறனானதுமான கைத்தொலைபேசி செயலியொன்றை (EDR Mobile APP) தேர்தல் ஆணைக்குழு அறிமுகப்படுத்தியிருந்தது.


இயலாமைக்குட்பட்ட நபர்களை தேர்தலில் உள்வாங்குவதற்காக தேர்தல் ஆணைக்குழு முக்கிய படிமுறைகளை மேற்கொண்டிருந்தன. இப்படிமுறைகளில் குறிப்பாக இயலாமைக்குட்பட்டவர்களுக்கான அடையாள அட்டை, விழிப்புலனற்றவர்களுக்கான தொட்டுணரக்கூடிய வாக்குச்சீட்டு (Tactile Ballot), செவிப்புலனற்றவர்களுக்கான சைகை வழிகாட்டல் அறிவித்தல்கள், மற்றும் சக்கர நாற்காலி பயன்படுத்துகின்றவர்களுக்கு இலகுவாக அணுகக் கூடிய வகையில் வாக்குப் பெட்டியை வைத்தல் போன்றன உள்ளடக்கப்பட்டிருந்தன. நடந்து செல்வதற்கு இயலாயுடையவர்களுக்கு வாக்கெடுப்பு நிலைய வளாகத்தில் போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டிருந்தன. முதற்தடவையாக பகுதியளவில் பார்வைக் குறைபாடுடையவர்களுக்கு விசேட அனுமதி பெறப்படாமல் தமது வாக்கைப் புள்ளடியிடுவதற்கு தனிப்பட்ட துணைக்கருவிகளை எடுத்துச் செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இயலாமைக்குட்பட்ட நபர்களை தேர்தல் செயன்முறையில் சமமாகவும் நியாயமாகவும் உள்வாங்குவதற்கும், அவர்களுடைய வாக்குரிமையைப் பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள ஆரோக்கியமான நடவடிக்கைகளுக்கு பஃவ்ரல் அமைப்பு தேர்தல் ஆணைக்குழுவுக்கு இதயபூர்வ நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றது. தேர்தல் ஆணைக்குழுவால் மேற்கொள்ளப்பட்டுள்ள தொடக்க முயற்சிகளை பஃவ்ரல் அமைப்பு பாராட்டுவதுடன், எதிர்காலத்தில் மேலும் மேம்படுத்துமாறும் வேண்டிக் கொள்கின்றது.

தேர்தல் பரப்புரைகளின் போதும், வேட்பாளர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு சமூக ஊடகங்கள் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன், அதிகளவான பிரஜைகளும் செயலூக்கமாக சமூக ஊடகங்கள் வாயிலாக தேர்தல் பரப்புரைகளில் பங்கெடுத்திருந்தனர். இதனைக் கண்காணிப்பதற்காக தேர்தல் ஆணைக்குழு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் மிகவும் முக்கியமானவையாக அமைந்திருந்தன. பஃவ்ரல் அமைப்பு Hastag Generation உடன் இணைந்து இத்தொடக்க முயற்சிகளில் பங்கெடுத்திருந்தது. தேர்தலுக்கு முன்னரான காலப்பகுதியில் பஃவ்ரல் அமைப்பு தேர்தல் ஆணைக்குழுவுடன் 717 உள்ளடக்கங்களைப் பகிர்ந்திருந்ததுடன், அமைதிக் காலத்தில் 667 உள்ளடக்கங்களும், மற்றும் கட்டணம் செலுத்தப்பட்ட முகநூல் பரப்புரை விளம்பரங்கள் 108 உம், தேர்தல் தினத்தன்று 130 தேர்தல் பரப்புரை உள்ளடக்கங்களும் பகிரப்பட்டிருந்தன.

கன்னொருவ ஆரம்பப் பாடசாலை வாக்கெடுப்பு நிலையத்தில் தேர்தல் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளையில் உயிர்நீத்த பெண் அரச உத்தியோகத்தரின் குடும்பத்தாருக்கு பஃவ்ரல் அமைப்பு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றது.

அனைத்து மாவட்ட ஒருங்கிணைப்பாளர்களுக்கும், தேர்தல் கண்காணிப்பாளர்களுக்கும் மற்றும் பணிக்குழாமினருக்கும் அவர்களுடைய தளராத அர்ப்பணிப்பான சேவைகளுக்கும் ப.்.வ்ரல் அமைப்பு மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றது. தேர்தல் கண்காணிப்புப் பணிகளை வெற்றிகரமாகவும், ஜனநாயகச் செயன்முறையைப் பாதுகாப்பதற்கு அவர்களுடைய அயராத பங்களிப்பும் ஏதுவாக அமைந்தது.

தேர்தலுக்கு முன்னரான காலப்பகுதி தொடக்கம் தேர்தல் தினம் வரைக்கும், 40 மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள், 25 களநிலை ஒருங்கிணைப்பாளர்கள், 2,300 நிரந்தர நிலையக் கண்காணிப்பாளர்கள் (வாக்கெண்ணும் நிலையங்கள்/பெறுபேறு திரட்டும் நிலையக் கண்காணிப்பாளர்கள்) மற்றும் 200 நடமாடும் கண்காணிப்புக் குழுக்கள் மூலம் 800 நடமாடும் கண்காணிப்பாளர்கள் மற்றும் நீண்டகால கண்காணிப்பாளர்கள் 160 பேரும் ப.்.வ்ரல் அமைப்புடன் இணைந்து கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். தேர்தலுக்குப் பின்னராக காலப்பகுதியிலும் விழிப்பாகவும், அமைதியைப் பேணுமாறும் அனைத்துப் பிரஜைகளிடமும், அரசியற் செயற்பாட்டாளர்களிடமும் ப.்.வ்ரல் அமைப்பு வேண்டிக்கொள்கின்றது.



**ரோஹன ஹெட்டியாராச்சி**

**நிறைவேற்றுப் பணிப்பாளர்**